1979 ஏப்ரல் 20]

திரு. வ. மு. சுப்பிரமணியன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது அரசாங்கமே இலவசமாகக் கட்டிக்கொடுப்பதற்கு அதிக சாத்தியம் இல்லை. கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வட்டியில்லாத கடன் தருகிறார்கள். ஆனால், அதைப் பெறுவதில் சிக்கல்கள் இருப்பதால் அதைப் பெற முடியாத நிலைமை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தக் கடன்களைப் பெற்று அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொள்ள ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் துறையிலிருந்து கடன் எழுப்பி அதன் மூலமாகப் பரவலாக ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டலாமா என்று இப்போது தீவிரமாக யோசிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : அரிசனங்களுக்குக் கட்டிக் கொடுக்கிற இந்த வீடுகள் சன்னமாக கோழிக் கூண்டுபோல் இருக்கின்றன. ஆனால் நல்லவிதமாக குடியிருக்க லாயக்கு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இதை மனதிலே கொண்டு பெரிய வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பு 207 சதுர அடியில் வீட்டினைக் கட்டினார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் மனது வைத்து அதை 237 சதுர அடியாக மாற்றியிருக்கிறார். தற்போது கொஞ்சம் பெரிய வீடாகத்தான் கட்டிக் கொடுக்கிறோம்.

பக்கிங்காம் கால்வாய் சீரமைப்பு.

*வினா எண் 747—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1898 ஆம் ஆண்டில் ரஸ்ஸல் என்ற இன்ஜினியர் பிளானுடன் பக்கிங்காம் கால்வாயைப் பற்றி எழுதியுள்ள நூலின் அடிப்படையில் பக்கிங்காம் கால்வாயை சீர்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

கீழ்பவானி பாசனத் திட்டம்.

*வினா எண் 748—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கீழ்பவானி பாசனத் திட்டத்தில் ஒரு போகம் நஞ்சை, ஒரு போகம் புஞ்சை என்றிருப்பதை முழுவதும் புஞ்சை என்று மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பயிர் கட்டுப்பாடு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல பகுதிகளிலுள்ள குளங்களில் மராமத்து சரியாக செய்யப்படாது மண் பெருக்கு இருக்கிறது. அதனால் தண்ணீர் ஊற்று, பிடிப்புக் குறைவாக இருக்கிறது. அப்படிப்பட்ட குளங்களில் புல்டோசர் வைத்து, மண்ணை அப்புறப்படுத்தி, நீர்ப்பெருக்கை அதிகப்படுத்த அந்த அரசு முன்வருமா? அதுகுறித்து ஏதேனும் செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கீழ்பவானி திட்டத்தைப் பற்றியது.

திரு. க. நாச்சிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, எவ்வளவு ஏக்கர் இத் திட்டத்தின்மூலம் பாசன வசதி பெற்று வருகிறது ? அத் திட்டத்தின்மூலம் அவினாசி, பல்லடம் போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு பாசன வசதியை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் ஏதாவது உண்டா என்று அறியவிரும்புகிறேன்.